சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – 2010–11ஆம் ஆண்டு பகுதி II திட்டங்கள் சேலம் மாவட்டம் – மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கம் – அதிவேக இழைப்படகு வாங்குவதற்காக – ரூ.10.00 இலட்சத்திற்கு – நிர்வாக ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (என்.1) துறை

அரசாணை (நிலை) எண்.149 நாள். 27.5.2010.

திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசி 13

படிக்க:–

தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை கடித எண். F/7575/பகுதி –II/2010–11 நாள். 27.01.2010.

***

ஆணை:–

மேலே பார்வையில் படிக்கப்பட்ட நீர்வள ஆதாரத்துறை திட்ட உருவாக்கத் தலைமைப்பொறியாளர் கடிதத்தில் சேலம் மாவட்டம் மேட்டூர் அணையானது, 59.25 சதுர மைல்களில் 93500 மி.க.அடி தண்ணீர் கொள்ளளவு கொண்டது என்றும், அணைக்கட்டின் நீளம் சுமார் 5300 அடி என்றும், இதன் நீர்ப்பரப்பளவு அதிகமாக உள்ளதாலும், ஆய்வின் போது நீர்ப்பரப்பு அளவினை கண்காணிக்கும் பொருட்டு, அதிவேக படகு ஒன்று தேவையாக உள்ளது என்றும், ஏற்கெனவே உள்ள 3 படகுகள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது என்றும், எனவே கம்பியில்லாத சாதனம் மற்றும் உயிர் காக்கும் சாதனம் போன்ற நவீன வசதிகளுடன் கூடிய அதிவேக இழை படகு ஒன்று வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், இதற்கு 2010–11ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் ஆகும் என்றும், இது திருச்சி மண்டல தலைமைப் பொறியாளரால் செயலாக்கப்படும் என்றும் இதனை இயக்குவதற்கு கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது என்றும் தெரிவித்து ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்பளிப்பு வழங்கும்படி அரசினை கோரியுள்ளார்.

2. மேற்கண்ட திட்டத்தினை 2010–2011ஆம் ஆண்டு பகுதி –II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக்குழுவால் (Standing Finance Committee) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சேலம் மாவட்டம் மேட்டூரில் அமைந்துள்ள ஸ்டான்லி நீர்த்தேக்கதிற்கு அதிவேக இழை படகு வாங்குவதற்கு, ரூ.10,00,000/–(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்), 2010–11ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ், நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. சில்லரை செலவினம், சிறு மேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின்கீழ் ஏற்படும் மொத்த பணி(works) மதிப்பூட்டுத் தொகையில் 2.5% க்கு மேல் மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

3. மேற்கண்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

**4701 – பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு 03 – நடுத்தரப்பாசனம் – வணிகத் தன்மை வாய்ந்தது – 315 – தமிழ்நாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களிலும் அவற்றை சுற்றிலுமுள்ள பூங்காக்களை மேம்படுத்தலும், அழகுப்படுத்தலும் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநில திட்டம் JA தமிழ்நாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களிலும் அவற்றை சுற்றிலுமுள்ள பூங்காக்களை மேம்படுத்தலும், அழகுப்படுத்தலும் 19 – இயந்திரமும் சாதனமும் – 01– வாங்குதல் (த.தொ.கு. 4701–03–315–JA 1915)"**

4. மேற்கண்ட திட்டத்தை விரைவாக செயல்படுத்தி, நிறைவேற்றவும், இத்திட்டத்தினை, நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகைக்கு மிகாமல், செயல்படுத்தி முடிக்க வேண்டும் என்றும் ஏற்கனவே உள்ள 3 பயன்பாட்டில் இல்லாத படகுகளை கழிவு செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும், தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.25178 பொ.ப.II/2010-1, நாள். 17.5.2010–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப்பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை–5.
தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20.
கருவூல அலுவலர், திருச்சி/சேலம்.
மாநிலக் கணக்காயர், சென்னை 18.
நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை–9.
பொதுப்பணித் (ISpl 1)துறை, சென்னை–9.
நிதி (பொ.ப.II/வ.செ.பொ.II)த்துறை, சென்னை–9.
SC/SF.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்